## ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,124 ஐப்பசி மாதம்

# மாபெரும் அரசியல் இயக்கமாக இ.ம.இ.தான் வளர முடியும்!



"பதினெண்சித்தர் மடத்தின் குருபீடத்தை, குருமகா சன்னிதானத்தின் திருவடியை ஒரே ஒருமுறை வணங்கியவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தங்கள் கால் செருப்பைக் கழட்டி விட்டால் அந்தச் செருப்பில் ஒட்டியிருக்கும் தூசுகள் கூட அட்டமாசித்திகளைச் செய்யும்."

\- குருபாரம்பரியம்.

பதினெண்சித்தர் மடத்தின் குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

# உள்ளுறை


1. **“இந்துவேத மாநாடு குறித்த சிறு விளக்கம்.”** - 1991இல் தஞ்சை திலகர் திடலில் நடைபெறும் இந்துவேத மாநாட்டிற்காக குருதேவர் அவர்கள் அளித்த விளக்க அறிக்கை.

2. **“மாபெரும் அரசியல் இயக்கமாக இ.ம.இ.தான் வளர முடியும்.”** - கோவை மாவட்ட சிறுமுகை அடியான் ஒருவருக்கு குருதேவர் அவர்கள் எழுதிய மடல்.

3. **“கோவை மாவட்ட இ.ம.இ. புதிய அமைப்பு.”** - கோவை மாவட்ட அடியான்கள் அனைவருக்குமாக குருதேவர் அவர்கள் வழங்கிய செயல்திட்டம்; அருட்பணி விரிவாக்கத் திட்டத்திலும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்திலும் செயல்படுவது குறித்து விரிவாக வழங்கிய அறிவுரை.

4. **“இந்துவேதம் அறிக்கை”** - இந்துவேதம் பற்றி விரிவாக அச்சிட்டு வழங்கப்பட்ட அறிக்கையின் நகல்.

## 1991, செப்டம்பர் 28, 29 தேதிகளில் தஞ்சை திலகர் திடலில் நடைபெறும்

# இந்து வேத மாநாடு குறித்த சிறு விளக்கம்!

### இந்து வேதம் என்றால் என்ன?

இந்து என்ற ஒரே சொல்லுக்கு நேரிடையாகப் பொருள் கொள்ள ஆயிரக்கணக்கான சொற்கள் இருக்கின்றன. வேதம் என்ற சொல்லுக்கு வேதித்தல், அதாவது சமைத்துப் பக்குவப்படுத்துதல் என்று பொருள்.

இந்த இந்து வேதம் இம்மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்னரே கணக்கற்ற கோடிகோடி ஆண்டுகளாக அண்டபேரண்டங்கள் முழுவதும் பரவி, வியாபித்து, வளர்ந்து வலிமை பெற்ற ஒன்றாகும்.

கடவுள்களாலேயே காலங்கள் தோறும் மக்களுக்கு நேரடியாகவே வழங்கப்படுவது இந்து வேதம்.

கடவுள்களில் தாங்களாகவே தோன்றுகின்ற கடவுள்கள் என்றும், அருளாற்றல் மிக்கவர்களால் தோற்றுவிக்கப்படும் கடவுள்கள் என்றும் இருபெரும் வகையினர் உண்டு என்று தெளிவாக விளக்கும் வேதம் இந்து வேதம்.

மனிதர்களை அடிக்கடி நேரில் வந்து பார்த்து, பாதுகாத்து, வழிநடத்துபவர்களே கடவுள்கள் என்று வலியுறுத்தும் வேதம் இந்து வேதம்.

பதினெண்சித்தர்களின் நான்கு வகையான அருளுரைகளுக்குள் அடங்குபவர்கள்தான் மெய்யான கடவுள்கள் என்று கூறும் வேதம் இந்து வேதம்.

எந்தெந்த நாட்டில், எந்தெந்த இனத்தவர்க்காக, எந்தெந்த மொழியில், எந்தெந்த கடவுள் வேதத்தைக் கூறுகின்றரோ; அந்தந்த கடவுளும், வேதமும் அந்தந்த நாட்டுக்கும், இனத்திற்கும், மொழிக்கும் மட்டுமே உரியன என்பதை இந்து வேதம் தெளிவாக விளக்குகின்றது.

இந்த இந்து வேதம் நமக்காக நமது தாய்மொழியான செந்தமிழ் மொழியில் அருளப்பட்டது.

ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றும் இணைந்து உருவாகும் சீவனின் வடிவமே இலிங்கம் என்பதை தெளிவாக விளக்குவது இந்து வேதம்.

பதினெண்சித்தர்களின் அருளுலகப் படைப்புகளில் 'நான்மறை', 'நான்முறை', 'நானெறி', 'நான்வேதம்' எனும் நான்கும் மிகமிக அடிப்படையான இலக்கியங்களாகும்.

இவற்றுள் 'நான் வேதம்' எனப்படுபவைதான்; இருடி வேதம், அசுர வேதம், யாம வேதம் அல்லது சாம வேதம், அதர்வான வேதம் எனப்படுபவையாகும்.

இந்த இந்துவேத மதமான இந்து மதம் ஒன்றே எக்காலத்திலும் நிலையானதாக உள்ளது. இந்த இந்து வேத மதமான இந்து மதம் எனும் ஆலமரத்தின் இலைகளாகவும், கிளைகளாகவும், விழுதுகளாகவும் சில துணை வேதங்கள் தோன்றினாலும், மிக விரைவில் அவை தாய் வேதமான இந்து வேதத்திலேயே ஐக்கியமாகி விடும் என்பதுதான் இந்து வேதத்தின் தெளிவான கருத்து.

இந்து வேத மதமான இந்து மதம், மற்ற எந்த அந்நிய மதத்தோடும் போட்டி பொறாமைகளையோ, சண்டை சச்சரவுகளையோ வளர்த்துக் கொள்ள விரும்பாததால் இம்மதத்திற்கு நலிவும் மெலிவும் தோன்றுவது இயற்கை ஆகி விட்டது.

ஆகவேதான், பதினெண்சித்தர்கள் நான்கு யுகங்களிலும், வாழையடி வாழையென வந்த பதினெண்சித்தர்கள் மரபில் மட்டுமே பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றி, தங்கள் வாய்ப்பு வசதிக்கேற்ப தமிழகத்தில் ஏதேனும் ஒரு பகுதியில் பதினெண்சித்தர் மடத்தைத் தோற்றுவித்து இந்து வேதமதமான இந்துமதத்தை மறுமலர்ச்சி அடையச்- செய்யும் எல்லாவகையான செயல்களையும் செய்யத் திட்டம் செய்துள்ளனர்.

பதினெண்சித்தர்கள்தாம் இந்த இந்து வேதத்தை அருளுலகப் பொருளுலக வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து வகைப்பட்ட செய்திகளையும், தனித்தனித் துறைகளாகப் பிரித்து மிகத் தெளிவாக அருளூறு செந்தமிழ் மொழியில் வழங்கியுள்ளனர்.

இவற்றுக்குள் அடங்காத உணர்வுகளோ, எண்ணங்களோ, கருத்துக்களோ, செயல்களோ, செய்திகளோ ஏதுமே இல்லை.

இப்படிப்பட்ட இந்து வேத மதமான இந்து மதத்தின் மறுமலர்ச்சிக்காகவே பதினெண்சித்தர் மடம் தோற்றுவிக்கப்பட்டது.

பதினெண்சித்தர் மடத்தின் பதினோராவது பீடாதிபதியாக, இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் விளங்கினார்.

இவர் கி.பி. 785ஆம் ஆண்டில் இருந்து கி.பி. 1040ஆம் ஆண்டு வரை இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் இம்மண்ணுலகில் செயல்பட்டு, பிற்காலச் சோழப் பேரரசை உருவாக்கியவர்.

பதினெண்சித்தர்களின் போதனைகளையும், சாதனைகளையும், அருளுரைகளையும் பாமரர்க்கும் விளங்கும் வண்ணம் பரவச் செய்து இந்து வேத மதமான இந்து மதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்தவரே சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருரர் அவர்கள்.

இந்து வேதத்திற்குரிய 108 பூசை மொழி நூல்கள், 48 பூசை விதி நூல்கள், 96 தத்துவ நூல்கள், 144 செயல் சித்தாந்த நூல்கள் என்னும் நான்கு (4) வகையான நூல்களை செப்பேடுகளில் எழுதி உலகின் பல பகுதிகளில் நிலையாகப் பாதுகாக்க ஏற்பாடு செய்தார். இந்து மதத்திற்குரிய ஆறுவகைப்பட்ட வாக்குகள், ஆறுவகைப்பட்ட வாக்கியங்கள், ஆறுவகைப்பட்ட வாசகங்கள் எனும் 18 வகையான நூல்களையும்; ஆறுவகைப்பட்ட தரங்கள், ஆறுவகைப்பட்ட திரங்கள், ஆறுவகைப்பட்ட திறங்கள் எனும் பதினெட்டு வகையான நூல்களையும் ஆக மொத்தம் 36 வகைப்பட்ட நூல்களையும் உலகின் பல பகுதிகளில் நிலையாகப் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்தார்.

காவிரியாற்றங்கரைக் கருவூருரைத் தொடர்ந்து அவரது பாரம்பரியத்தில் வாழையடி வாழையாகத் தோன்றிய இந்து வேத பீடம், இந்து மதத் தந்தை, இந்து மதத் தலைமை ஆச்சாரிய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூருரர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாகவும், இன்றைய பதினெண்சித்தர் மடாதிபதியாகவும், கருகுல ஆதீனமுமாய் விளங்குகிறார்.

இவர் பதினெட்டு ஆண்டுகள் பயிற்சியிலும், பதினெட்டு ஆண்டுகள் முயற்சியிலும், பதினெட்டு ஆண்டுகள் இல்லறத்தையும் கடந்து இன்று இவ்வுலகம் முழுமைக்கும் பதினெண்சித்தர்களின் அருட்கொடைகளை வாரிவாரி வழங்கி வருகின்றார்.

தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உருவாக்கி அருட்பணிகள் செய்து வருகின்றார்.

பதினெண்சித்தர்களின் அருளுலகப் போதனைகளையும், சாதனைகளையும்; பொருளுலக அறிவியல்களையும், கலைகளையும் உலகோர் முறையாகக் கற்று அறிய பள்ளிகளையும், கல்லூரிகளையும், தனிப்பட்ட ஓர் பல்கலைக் கழகத்தையும் அமைத்திட இவர் அயராது உழைத்து வருகின்றார்.

மேலும் இன்று வரை 1500க்கும் மேற்பட்ட அச்சிட்ட அறிக்கைகளை வெளியிட்டதோடு, சிறிய பெரிய அளவில் சுமார் 100 புத்தகங்களையும் வெளியிட்டுள்ளார்.

தற்போது இந்து இலக்கியக் கழகத்தின் மூலம், பதினெண்சித்தர்களின் அருளியல் கருத்துக்களின் மூலம்தான் உலகோரைத் தட்டி எழுப்ப முடியும் என்ற நிலையில் இந்து வேதத்தையும் சிறுசிறு பகுதிகளாக வெளியிட முடிவு செய்து, இந்தத் தஞ்சை மாநாட்டில் முதற்கட்டமாக ஒரு பகுதி சிறு நூலாக வெளியிடப்படுகின்றது.

அத்துடன் இதுபோன்று மாநாடுகளை தமிழகம் முழுவதும் ஆங்காங்கே நடத்துவதன் மூலம் சாதி, மதம், மொழி, இனம், நாடு என்ற அடிப்படையில் உள்ள சகல சண்டை சச்சரவுகளையும் சகோதரத்துவ அடிப்படையில் தீர்க்க முயன்று வருகின்றார்.

பதினெண்சித்தர்களின் வழிபாட்டு முறையில், மனிதனும் கடவுள் நிலையை அடையலாம் என்று இந்து வேதத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளதால், சாதாரண மனிதனுக்கு உகந்தவை அனைத்தும் கடவுளுக்கும் உகந்தவைகளாகக் கருதப்படுகிறது.

சென்னை செங்குன்றம் அடுத்த காரனோடை எனும் கிராமத்தில் இவர் ஓர் கவின்மிகு **கருகுலம்** அமைத்துள்ளார். ஏற்கனவே, குருகுலம், திருகுலம், தருகுலம் என்று மூன்று அமைப்புக்களையும் உருவாக்கிய இவர் இந்த வழிபாட்டுத் தலத்தை **கருகுலம்** என்று அமைத்திருக்கிறார்.

பெரிய தோப்பு போன்ற அமைப்பில் உள்ள இவ்வாலயத்தில், உள்ளே நுழைந்தவுடன் சிவனும் சத்தியும் இணைந்த சத்தி வடிவம் இலிங்கமும் சூலமுமாகிய அம்மையப்பராக காட்சி அளிக்கிறது.

உள்ளே அற்புத மந்திர சத்தி படைத்த தாமரைக்குளமும், பிள்ளையார் வடிவமும் பல்வேறு எந்திர சத்திகள் பொறிக்கப்பட்ட 18 பீடங்களும் அமைந்துள்ளன.

இங்கு செல்லும் அனைவரும் நற்பேறு பெற்றவராவார்.

இவ்வாலயத்தில் சென்று வழிபடும் நலிவுற்றோர், நலமுற்றோராகவும்; நலமுற்றோர், வளமுற்றோர்களாகவும் மாறுவது கண்கூடு.

பொதுவாகவே இந்து வேத மதமான இந்து மதத்தில் முன்னோர் வழிபாடும், மூத்தோரை மதித்துப் போற்றிப் பணிந்து பேணிப் பாதுகாத்தலும் முதன்மையான நோக்கங்களாகும்.

இப்படி உயரிய, உலகின் அனைத்துப் பொருட்களையும், இந்து வேதத்தையும் உள்ளடக்கிய இந்து வேத மதமான இந்து மதம்; அனாதி மதமான இந்து மதம் இன்று அனாதை மதம் என்ற நிலையில் இருப்பதை மாற்ற வேண்டும் என்று உறுதி பூண்டு இன்று இம்மாநாடு நடைபெறுகிறது.

இன்றைக்கு சப்பான் நாட்டில் சகல கலைகளையும், வாழ்வியல் நெறிகளையும், தொழிற்கல்வி போன்ற அனைத்தையும் அவர்கள் தங்கள் தாய்மொழியிலேயே படித்து அறிகிறார்கள்.

ஆனால் முன்னை மிகப் பழமையான காலத்திலேயே இவை அனைத்தையும் நமது தாய்த்தமிழ் மொழியில் சித்தர்கள் நமக்கு வழங்கிச் சென்றிருந்தும் நாம் அவற்றை உணராமல் இருப்பதை மாற்றி அமைக்க வேண்டும்.

சித்தர்கள் முறையில் அனைத்துப் பொருட்களையும் செந்தமிழ் மொழியில் இவ்வுலகிற்கே எடுத்தியம்ப வேண்டும் என்பதுதான் இம்மாநாட்டின் உயரிய நோக்கமாகும்.

**குறிப்பு**:-

ஆலயங்களில் தொண்டு புரியும் குரு, குருக்கள், குருமார், பூசாறி, அருட்சினையாளர் போன்றோர் பதினெண்சித்தர் மடத்தை அணுகினால் தமிழிலேயே அவர்களுக்கு மந்திர, மந்தர, மந்திறப் பயிற்சிகள் அளிக்கப்படும்; மந்திரிக்கக் கற்றுக் கொடுக்கப்படும். மந்திரிப்பதன் மூலம்தான் அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கி மக்களைக் காக்க முடியும். இப்படி மந்திரிக்கும் பயிற்சி அளிக்கும் இந்து வேத பாடசாலைகளை எல்லாக் கோயில்களிலும் துவங்கிடவும், பதினெண்சித்தர் மடத்தில் பயிற்சி அளிக்கவும் திட்டமிட்டுள்ளார். அதற்காகவே இந்த இந்து வேத மாநாடு நடத்துகிறார்.

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்.**

**காரனோடை, சென்னை - 600067.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் தட்டச்சுப் பிறதியாகக் கிடைத்தது.//**

# மாபெரும் அரசியல் இயக்கமாக இ.ம.இ.தான் வளர முடியும்!

24-10-91,

பொன்னேரி.

அனுப்புநர்:-

ஞானுச்சாரியார்,

No.3, N.G.O.நகர்,

பொன்னேரி - 601204.

பெறுநர்:-

உயர்திரு அம்பிகாபதி,

மாதேசுவரன் கோயில், மலை அடிவாரம்,

கணேசபுரம், சிறுமுகை (P.O.),

கோவை - 641302.

1. திருவருட் செல்வர் அம்பிகாபதிக்கு தலைவர், குருதேவர், ஞானுச்சாரியார் விடுத்துக் கொள்ளும் புதிய செயல்திட்ட விளக்கத் திருவோலை.

2. நீங்கள் அனைவரும் என்றைக்குப் பதினெண்சித்தர் மடத்தில் சேர்ந்தீர்களோ அந்த நொடி முதல் அருளாளராக ஆகிவிட்டீர்கள். இதுதான் பதினெண்சித்தர் மடத்தின் சிறப்பு.

3. பதினெண்சித்தர் மடத்தைச் சேர்ந்தவர்கள், பதினெண்சித்தர் மடாதிபதியை ஒரே ஒரு நொடியாவது பார்த்தவர்கள், பதினெண்சித்தர் மடத்துக் குருபீடத்தை மடத்தில் பார்த்து வணங்கியவர்கள்,

பதினெண்சித்தர் மடத்திலிருந்து அருளூறு பூசனைப் பொருட்களான திருநீறு, குங்குமம், முடிகயிறு, தாயத்து, சக்கரம், உருத்திராக்கம், ... முதலியவற்றில் ஏதாவது வேண்டிப் பெற்றவர்கள், ... முதலியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் அருளூற்றுக்களாக, அருட்செல்வர்களாக மாறி விடுவார்கள். இன்னும் சொல்லப் போனால் **“பதினெண்சித்தர் மடத்தின் குருபீடத்தை, குருமகாசன்னிதானத்தின் திருவடியை ஒரே ஒரு முறை வணங்கியவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தங்கள் கால் செருப்பைக் கழட்டி விட்டால் கூட அந்தச் செருப்பில் ஒட்டியிருக்கும் தூசுகள் கூட அட்டமாசித்திகளைச் செய்யும்”** என்று குருபாரம்பரியம் கூறுகிறது. அப்படித்தான் இன்றைக்குத் தமிழகத்திலும், தென்னிந்தியாவிலும், இந்தியாவிலும், சீனா, கனடா, அமெரிக்கா, தாய்லாந்து, தாய்வான், இங்கிலாந்து, பிரான்சு, செர்மனி, இரசியா, சப்பான், ஆசுத்திரேலியா, பாரசீக நாடுகள், மலேசியா, சிங்கப்பூர், பாகிசுதான், ... என்று உலகெங்கும் இன்றுள்ள பதினெண்சித்தர் மடத்து குருபீடத்தின் ஆதரவாளர்களும், அருளூறு பூசனைப் பொருள்களைப் பெற்றவர்களும், குருமகாசன்னிதானத்தின் படத்தை வைத்துப் பூசை செய்பவர்களும் அருட்சத்திகளையும், சித்திகளையும் பெற்று பிறருக்கு அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கி அருட்பணியாற்றி வருகிறார்கள்.

4. உலகம் முழுவதும் பதினெண்சித்தர் மடாதிபதி, குருமகா சன்னிதானத்தின் திருவருளால் நிறைய அருளாளர்கள் உருவாகி நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் அருளை வழங்கிக் கொண்டிருக்கும் போது; தமிழகத்திற்குள் இருக்கின்ற சிறுமுகையில் இருக்கின்ற பதினெண்சித்தர் மடத்து அருளைப் பெற்றவர்களுள் மட்டும் யார் பெரியவர், யார் சின்னவர் என்ற வீணான சண்டையில் வாழ்நாளை வீணாக்கித் தங்களுடைய புனிதப் பிறவியை வீணாக்குவது ஏன்? எல்லோருமே திருந்த வேண்டும்!

5. குருதேவரை ஒருமுறை கூட நேரில் பார்க்காத பலர் குருதேவர் படத்தை மட்டும் வைத்துப் பூசை செய்தே, அற்புதச் சித்திகளைப் பெற்று எண்ணற்ற மாயங்களைச் செய்கிறார்கள் என்ற போது; குருதேவரைப் பலமுறை தொட்டு வணங்கியவரும், குருதேவரைத் தன் நெஞ்சுக்குள் எப்போதும் நிலையாக வைத்திருப்பவருமான அம்பிகாபதி தன்னிடம் வரும் நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் மந்திரித்து நன்மையை உண்டாக்கியிருப்பதைப் பார்த்தாலே போதும்; திருவருட் செல்வரான அம்பிகாபதி பெரிய பெரிய அருட்செயல்களை எல்லாம் செய்யக் கூடியவர் என்பதை உணரலாம். *(... ஐந்து வரிகள் தெளிவாகத் தெரியவில்லை ...)*

அம்பிகாபதி, இதை விடப் பல பெரிய பெரிய அற்புதங்களைச் செய்ய வேண்டுபவர். அம்பிகாபதிக்கு இருக்கின்ற குருபத்திக்கு அவர் தமிழகம் முழுவதும் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் சென்று அருள் வழங்கக் கூடிய பெரிய அருளாளராகியிருக்க வேண்டும். ஆனால், அம்பிகாபதி ஆற்றங்கரை மணலில் மணல்வீடு கட்டி விளையாடும் சிறுபிள்ளை போல் தன்னுடைய அருளாற்றலையும், நேரத்தையும் விளையாட்டுப் பிள்ளைகளின் சண்டை விளையாட்டுக்களில் வீணாக்கிக் கொண்டிருக்கிறார்.

6. அம்பிகாபதி அவர்கள் தன்னுடைய பழம்பிறப்புக்களின் பயன்களை உணர்ந்து அடிக்கடி ஒரு நாள் இரண்டு நாள் என்று குருதேவரிடம் வந்து அருள்பெற்று, கருகுலத்தில் தவம் செய்து தன்னை மிகப் பெரிய அருளாளராக ஆக்கிக் கொண்டு; தனக்குக் கிடைக்கின்ற விடுமுறை ஓய்வுகளில் இராமசாமி, சுப்பிரமணி, சம்பத்து, ... முதலிய பலரையும் தன்னோடு அழைத்துக் கொண்டு மேற்கு மண்டலம் முழுதும் சுற்றுப்பயணம் செய்து; மிக விரைவில் மேற்கு மண்டலத்தில் உள்ள பல ஊர்களிலும் இந்துவேத விளக்கக் கூட்டங்களை நிகழ்த்தி மேற்கு மண்டலத்தில் இந்துவேத மாநாட்டை நடத்தித் தர வேண்டும்.

இந்த அஞ்சல் கண்ட பிறகாவது சிறுமுகைக்குள் சிறுபிள்ளைகள் போல் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடாமல், ஆற்று மணலில் வீடு கட்டி விளையாடும் சிறுவர்கள் போல் சண்டையிட்டுக் கொள்ளாமல்; பக்குவமுள்ள பெரியவர்களாக, தலைவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

7. அம்பிகாபதி கண்ட கனவுகள் அனைத்தும் வெறும் கனவுகளாகப் போய்விடக் கூடாது. அந்தக் கனவுகள் அவர் ஒரு நல்ல அருளாளராக வளரமுடியும் என்பதைத்தான் காட்டுகின்றன. எனவே, அவர் குருவழியாகப் பல பயிற்சிகளைப் பெற்று நல்ல பக்குவத்தோடு பல பெரிய பெரிய முயற்சிகளைச் செய்து உயர்வான சித்திகளைப் பெற்று இந்த மனிதப் பிறப்பை மிகச் சிறந்த பிறப்பாக மாற்றிக் கொள்ள வேண்டும். அதுதான் தேவை. எனவே, அவர் யாரைப் பற்றியும் கவலைப்படாமல், யார் எதைச் சொன்னாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல், குருபீடத்தோடு அடிக்கடி நேரடித் தொடர்பை நன்கு வளர்த்துக் கொண்டு அனைவருக்கும் சிறந்த வழியாக, வழிகாட்டியாக இருந்து செயல்பட வேண்டும். இதுதான் அவரது கடமை.

8. <u>நாம், அருளாளர்கள்; மற்றவர்கள் சாதி மதப் பிறச்சினைகளைக் கிளப்பினாலும் நாம் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும்.</u> நாம் இந்த உலகம் முழுவதும் நம் பின்னால் வரக்கூடிய மாபெரும் இந்துவேதத்தை தஞ்சைத் தாத்தா மூலம் பெற்று உலகுக்கு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். நாம் யார் என்பதை தாத்தாக்கள் ஆத்தாக்கள் அறிவார்கள். மனிதர்களைப் பற்றிய கவலை நமக்குத் தேவையில்லை.

9. இந்துவேத மாநாட்டின் மூலம், தஞ்சைத் தாத்தா ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தாம் செயல்பட்டது போல், ஒவ்வொரு

ஊரையும், பல வட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு வட்டத்தையும் 12 அருளாளர்களிடம் ஒப்படைத்து (1. வட்டத் தலைவர், 2. வட்ட இணைத் தலைவர், 3. வட்டத் துணைத் தலைவர், 4. வட்டச் செயலாளர், 5. வட்ட இணைச் செயலாளர், 6. வட்டத் துணைச் செயலாளர், 7. வட்டப் பொருளாளர், 8. வட்ட இணைப் பொருளாளர், 9. வட்டத் துணைப் பொருளாளர், 10. வட்ட அமைப்பாளர், 11. வட்ட இணை அமைப்பாளர், 12. வட்டத் துணை அமைப்பாளர்) புதிய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களை உண்டாக்க வேண்டும் என்ற அருளாணை வழங்கியுள்ளார். இதன்படி சிறுமுகைக்கு கோ. நடராசன் பொது அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நீங்களும், இராமசாமி, சுப்பிரமணி, சம்பத்து முதலியவர்களும் அவரைச் சந்தித்து மற்றவர்களையும் கலந்து பேசி சிறுமுகையைப் பல வட்டங்களாகப் பிரித்து சிறுமுகையில் இ.ம.இ.யை வளர்க்க முற்படுங்கள்.

10. **இன்றைய தமிழகத்தில் இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ.ம.இ. I.M.I.) ஒன்றுதான் சமய சமுதாய கலை இலக்கியத் தொழில் துறை அனைத்திலும் தமிழர்களின் பழம்பெரும் பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் உரிய புரட்சிக் கருத்துக்களை, புதுமைக் கருத்துக்களை, பயனுள்ள செயல்திட்டங்களைக் கூறுகின்ற வல்லமையைப் பெற்றிருக்கிறோம்.** <u>எனவே, நாளை நமதே! வெற்றி நமதே!</u>

11. இன்றைய இனப் பிரச்சினைகள், மதப் பிரச்சினைகள், சாதிப் பிரச்சினைகள், மொழிப் பிரச்சினைகள், தொழிலாளர் பிரச்சினைகள், ... முதலிய அனைத்தையும் இந்திய அளவில் தீர்த்து வைக்கக் கூடிய <u>**ஒரு மாபெரும் அரசியல் இயக்கமாக இ.ம.இ.தான் வளர முடியும்**</u> என்று மத்தியப் புலனாய்வுத் துறையே கருத்துக்களைக் கூறியிருக்கிறது. எனவே, <u>உன்னைப் போன்ற திறமைசாலிகள்</u>, அருளாளர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பலரையும் ஒன்று திரட்டும் ஆற்றல் படைத்தவர்கள் நமது இயக்கம் தஞ்சை இந்து வேத மாநாட்டின்

மூலம் <u>காட்டுத் தீ போல் தமிழகம் முழுவதும் வளர ஆரம்பித்திருக்கின்ற இந்த நேரத்தில்</u> அற்பமான சண்டைச் சச்சரவுகளுக்காக இயக்கத்திலிருந்து ஒதுங்கியிருக்கக் கூடாது. இதனைப் புரிந்து செயல்படு.

**<u>குறிப்பு</u>:-** உன்னை வைத்துக் கொண்டு திருவாரூர் வட்டாரத்தில் இ.ம.இ.யின் கிளைகளைத் துவக்க வேண்டும்; இந்துவேத விளக்கக் கூட்டங்களை நடத்த வேண்டும்; கோவையை மட்டும் விட்டுவிட்டு அதன் சுற்று வட்டாரங்கள் அனைத்திலும் பல இந்துவேத விளக்கக் கூட்டங்களை நிகழ்த்த வேண்டும் என்றெல்லாம் உன்னைப் பற்றி உயர்ந்த நம்பிக்கையோடு பல செயல்திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற இந்த நல்ல நேரத்தில்; நீ சிறுபிள்ளை போல் நெடிய அஞ்சல் எழுதியுள்ளது வியப்பாக இருக்கிறது, வேடிக்கையாக இருக்கிறது. நீ மிக விரைவில் ஒரு பெரிய நெடிய செயல்வீரனாக, பல பொறுப்புக்களை ஏற்று தமிழகம் முழுவதும் சுற்றி வர வேண்டும். சிறுமுகைக்குள் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாட வேண்டாம். விரைவில் நீங்கள் அனைவரும் பொன்னேரி வந்து குருதேவராகிய எம்மோடு வந்து பேசுங்கள். அல்லது குருதேவராகிய எம்மையும், இ.ம.இ. பொதுச் செயலாளரையும் உங்கள் வட்டாரத்தில் இரண்டு மூன்று இந்துவேத விளக்கக் கூட்டங்களுக்குச் சொற்பொழிவாற்றவும்; மக்களுக்கு அருட்கணிப்பு, அருள்வாக்கு, தீட்சை, தவம், குண்டலினி(நீ), யோகம், ஞானம், பரிகாரம், ... முதலியவை வழங்கவும் அழையுங்கள்! அழையுங்கள்! அழையுங்கள்!

12. நிகழ்ந்து விட்ட அற்பமான சண்டை சச்சரவுகளையெல்லாம் மறந்து புதிய தெம்போடும், ஆர்வத்தோடும் செயல்படக் கூடிய அறிவுரைகளை அனைவருக்கும் வழங்கும் வல்லமை உனக்கு உண்டு என்பதை உணர்ந்து செயல்படு. நீயாக பிறர் கூறுவதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காதே!

13. இந்துவேத மாநாட்டு வரவு செலவுக் கணக்குகள் இன்னும் முடிக்கப்படவில்லை. நீ, இராமசாமி, சுப்பிரமணி, சம்பத்து, ... முதலியவர்கள் உங்களிடம் உள்ள வசூல் இரசீதுப் புத்தகத்தையும், வசூலான பணத்தையும் பொன்னேரி முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

14. நாம் சட்டப்பூர்வமாக நிதி திரட்டவும், செலவுகளைச் செய்யவும் # பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டு விட்டது. பதிவு எண்: 796 / 4 of 1991. இதற்காக பொன்னேரி State Bankஇல் சட்டப்பூர்வமாக வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்துவேத மாநாடு இந்த அறக்கட்டளையின் சார்பாகத்தான் நடத்தப்பட்டது; இனிமேலும் நடத்தப்படும். எனவே, வங்கியின் மூலம் M.T. செய்து பணத்தை அனுப்புவதென்றால், பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை # S.B.A/c No : 76 / 10211 என்று அனுப்புங்கள். அல்லது டிராப்டு எடுப்பதென்றால் பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை என்று எடுத்து அனுப்பினால் வங்கியில் மாற்றிக் கொள்வோம். உடன் பதில்.

**அன்பு**
**ஞானத்தந்தை, குருதேவர்,**
**ஞானாச்சாரியார்,**
**24-10-91.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு இரா. சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. மூல நகலின் முதல் இரு பக்கங்கள் தெளிவாகத் தெரியவில்லை.//**

# ***இவை இப்பொழுது பயன்பாட்டில் இல்லை.***

4-11-91.

# இந்துவேத மாநாட்டில் அருளாட்சி நாயகம் வழங்கிய செயல்திட்ட அருளாணைப்படி

# கோவை மாவட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கப் புதிய அமைப்பு

**அருளாணை பெற்ற குருவாணையாகக் குருவாணை ஓலை நாயகம் குருதேவர், ஞானச்சாரியார், தலைவர், பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் வழங்கும் செயல்திட்டம்.**

1) கோவை மாவட்டத்திற்கு சிறுமுகையின் பொது அமைப்பாளராக இருக்கின்ற அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம் கோ. நடராசன் அவர்கள் பொது அமைப்பாளர் என்று நியமிக்கப்பட்டு அவருக்கு கோவை மாவட்டத்தின் அவைத் தலைவர் என்ற பதவி வழங்கப்படுகிறது. இதன்படி பதினெண்சித்தர் மடத்திற்கும், பீடத்திற்கும் உரிய இந்து மறுமலர்ச்சி இயக்கம், அருட்பணி விரிவாக்கத் திட்டம், சித்தர் கருவூரார் அருட்கோட்டம், சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றம், சித்தர் கருவூரார் முத்தமிழ்ப் பேரவை, சித்தர் கருவூரார் பல்கலை மாமன்றம், ... முதலிய நாற்பத்தெட்டு வகையான நிறுவன நிருவாகங்களும் இவரை அவைத் தலைவராகக் கொண்டு செயல்பட வேண்டுமென்பது புதிய அருளாட்சிச் செயல்திட்டம்.

2) இத் திட்டத்தின்படி கோவை மாவட்டத்தில் இ.ம.இ. உருவாக்கப்படுகிறது. இதற்காக கோவை மாவட்ட இ.ம.இ.க்கு தலைவராக அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம் இரா. இராமசாமி அவர்களும், செயலாளராக அருள்மிகு உப்பிலிப்பாளையம் பத்திரகாளியம்மன் சன்னிதானம் சம்பத்தும், பொருளாளராக அருள்மிகு

மேட்டுப்பாளையம் வனபத்திர காளியம்மன் சன்னிதானம் தேவதாசுவும், அமைப்பாளராக அருள்மிகு பன்னாரி மாரியம்மன் சன்னிதானம் சோ. அம்பிகாபதியும் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள், ஒரு வார காலத்திற்குள் இணைத் தலைவர், துணைத் தலைவர், இணைச் செயலாளர், துணைச் செயலாளர், இணைப் பொருளாளர், துணைப் பொருளாளர், இணை அமைப்பாளர், துணை அமைப்பாளர் என்று எட்டுப் பேர்களை உரிய பதவிகளில் நியமித்து கோவை மாவட்டத்திற்குரிய பன்னிரண்டு பேர்களின் மொத்தப் பட்டியலை அவைத் தலைவர் கோ. நடராசன் அவர்களிடம் காட்டி அவருடைய கையொப்பம் பெற்றுத் தலைமைப்பீடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**குறிப்பு:-** இதுபோன்று முக்கியமான தீர்மான செயல்திட்ட அஞ்சல்களுக்கு உடனுக்குடன் அவைத் தலைவரைச் சந்தித்துப் பேசி இயக்க வளர்ச்சியில் அவருடைய துணையோடு செயல்பட வேண்டும் என்று கூறப்படுகிறது.

3) இந்த மாவட்ட நிர்வாகக் குழுவின் பன்னிரண்டு பேர்களும் மாதம் ஒருமுறையாவது அவைத் தலைவரிடம் கூறி அவரை வரவழைத்து அவர் முன்னிலையில் இயக்கத்தின் எல்லா வகையான செயல்திட்டங்களையும், வளர்ச்சிக்குரிய தீர்மானங்களையும் விவாதித்து முடிவெடுக்க வேண்டும்.

4) இம் மாவட்ட நிர்வாகக் குழு; மாவட்டத்தில் உள்ள வட்டங்கள், வட்டாரங்கள், ஊர்கள், கிராமங்கள், ஊருக்குள் உள்ள தெருக்கள் என்று படிப்படியாகப் பல கிளை அமைப்புக்களை உண்டாக்க வேண்டும். ஒவ்வொரு கிளை அமைப்பிலும் மாவட்ட நிர்வாகக் குழுவில் இருப்பது போல் பன்னிரண்டு பேர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவினை அமைக்க வேண்டும்.

5) இப்படி இப்பொழுது இந்து வேத மாநாட்டின் அருளாணைப்படி உருவாக்கப்படுகின்ற பதவிகளுக்குரிய அனைவரும் ஓராண்டு காலத்திற்கு

**<u>நியமனப் பதவியாளர்களாகவே</u>** இருந்து செயல்படுவார்கள். இப்படி இவர்கள் செயல்பட்டு மாதச் சந்தா ரூபாய் 2/-, உறுப்பினர் அட்டை ரூ. 1/- என்று ஆக மொத்தம் ரூ. 25/- ஆண்டுச் சந்தாவைப் பெற்று சேர்க்கின்ற உறுப்பினர்கள் இந்த ஓர் ஆண்டின் இறுதியில்; அதாவது அக்டோபர் மாதம் 1992இல் நடக்கின்ற இ.ம.இ.யின் கட்சித் தேர்தலில் வாக்களித்துத்தான் இ.ம.இ.யின் எல்லாப் பதவிகளுக்கும் உரிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

6) இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் வாழையடி வாழையென பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதியாக இருப்பவர் பாரம்பரியத் தலைவராக இருப்பார். இவர்களுடைய வழிகாட்டல், வழித்துணை, தலைமை என்றென்றும் நிலையாக இருக்கும். இவர்களுக்கு அடுத்த நிலையில் மாநிலம் தழுவி இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருப்பவர்; இயக்கத்தில் உள்ள அனைத்து வகை உறுப்பினர்களும் வழங்குகின்ற நேரடி வாக்குச் சீட்டுக்களின் மூலமே தேர்ந்தெடுக்கப்படுவார். இதுபோலவே, எல்லாச் செயலாளர்களும் அவரவர் எல்லைக்குரிய உறுப்பினர்களால் நேரடித் தேர்தல் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அதாவது, மாவட்ட நிர்வாகக் குழுவுக்குரியவர்கள் மாவட்டம் முழுவதும் உள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அதேபோல் வட்டம் (தாலுகா), ஊர் (கிராமம்), தெரு முதலிய ஒவ்வொரு அமைப்புக்கும் உரிய நிர்வாகக் குழுவினர்கள் அந்தந்த எல்லைக்குரிய உறுப்பினர்களின் பொதுத் தேர்தலின் மூலமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் அனைவரும் இ.ம.இ.யின் தலைவரின் நேரடித் தலைமையின் கீழ் இயங்குவார்கள்.

7) இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் உள்ள எந்தவிதமான பிறச்சினைகள், சிக்கல்கள், தகராறுகள், சண்டை சச்சரவுகள், ... முதலிய அனைத்து விவகாரங்களிலும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியத்

தலைவர் குருதேவர் ஞானுச்சாரியார் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி எடுக்கின்ற முடிவே இறுதி முடிவு. ஏனென்றால் இது ஓர் அருளாளர் இயக்கம், பத்தி இயக்கம், வேத மறுமலர்ச்சி இயக்கம், பண்பாட்டு இயக்கம். இதுவே சமய சமுதாய அரசியல் கலை இலக்கியம் தொழில் ... முதலிய அனைத்து வகையான துறைகளையும் அருளுலகத்தாரின் திருவுள ஒப்புதல் பெற்றே நிகழ்த்துகிறது. எனவே, இதில் உலகியலான சட்டப் பிறச்சினைகளோ, வழக்கு மன்றத் தலையீடுகளோ, அரசாங்கத் தலையீடுகளோ இடம் பெறுவதற்கு இடமில்லை.

அதாவது, பதினெண்சித்தர் மடாதிபதியாக, பீடாதிபதியாக, ஞானுச்சாரியாராக, இந்துமதத் தந்தையாக, குருதேவராக இருப்பவர் அருளாட்சிக் குருபீடத்தில் அமர்ந்து; அருளுலகத்தாருடன் தொடர்பு கொண்டு நிகழ்த்துகின்ற இயக்கமே இந்து மறுமலர்ச்சி இயக்கம். எனவே, இந்த இயக்கத்தில் உள்ள ஒவ்வொருவரும் எப்பொழுது வேண்டுமானாலும் தங்களுடைய கருத்துக்களை, தங்களுடைய பிறச்சினைகளை நேரடியாகத் தலைவருக்குத் தெரிவிக்கலாம். ஆனால், **குறைந்தது அவரவர் உறுப்பினராக இருக்கக் கூடிய கிளை நிர்வாகக் குழுவினருக்குத் தெரிவித்துத்** தாங்கள் எழுதுகின்ற அஞ்சலின் நகல் ஒன்றை அவர்களுக்குக் கொடுத்து அவர்களின் பரிந்துரைக் கருத்தை (மறுத்தாலும் சரி, ஏற்றுக் கொண்டாலும் சரி) அவர்களை எழுதச் சொல்லி அனுப்ப வேண்டும். அதில் தலைவர், செயலாளர் இருவரும் கையொப்பமிட வேண்டும்.

8) இயக்க உறுப்பினர்களுள் தங்களுடைய கிளை, ஊரின் கிளை, வட்டத்தின் கிளை, வட்டாரத்தின் கிளை, மாவட்ட நிர்வாகக் குழு என்று படிப்படியாகத் தொடர்பு கொண்டு தங்களுடைய பிறச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதுதான் முறை. இப்படித் தீர்த்துக் கொள்வதில் மனநிறைவு கொள்ளாதவர்கள் தலைமைப்பீடத்தோடு தொடர்பு கொள்வதுதான் நல்லது. **அதுவே பொது விதி**.

9) நமது இயக்கத்தில் உள்ள உறுப்பினர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் தங்களுடைய சொந்த வாழ்க்கைப் பிறச்சினைகளேயோ, உலகியல் பிறச்சினைகளேயோ அடிப்படையாகக் கொண்டு இயக்கத்தின் நிர்வாகத்திற்கோ, செயல்பாடுகளுக்கோ, செயல்திட்டங்களுக்கோ பாதிப்புக்களே உண்டாக்கி விடக் கூடாது. அப்படிப் பாதிப்பு உண்டாக்குபவர்கள் மீது அந்தந்த மாவட்ட நிர்வாகக் குழு இயக்கப் பூர்வமாக நடவடிக்கை எடுக்கும்படி குருதேவர், இ.ம.இ.யின் பாரம்பரியத் தலேவர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யும்.

10) இயக்கத்தில் உள்ள உறுப்பினர்கள் எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் நமது இயக்கத்தைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்களேப் பற்றி எந்த விதமான விமரிசனத்தையும் செய்யக் கூடாது. அதாவது, சொந்தப் பாதிப்புக்கள் இருந்தாலும் சரி, மற்றவர்கள் கூறுகின்ற காரண காரியங்கள் தனக்குச் சரியென்று தோன்றினுலும் சரி; நமது இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஓர் உறுப்பினரும் நமது இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒரு மற்ற உறுப்பினரையும் குறை கூறக் கூடாது, குற்றம் சாட்டக் கூடாது, பழி சுமத்தக் கூடாது, வாய்க்கு வந்தவாறு விமரிசனம் செய்யக் கூடாது. இது அருளுலகச் சட்டம் அல்லது விதி. ஏனென்ருல் அருளுலகத்தின் அடிப்படையைக் கொண்டது நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

எனவே, இந்த இயக்கத்தில் உள்ள அனேத்து உறுப்பினர்களும் தங்களுக்கிடையில் உள்ள கறைகளேயும், குற்றம் குறைகளேயும், தவறுகளேயும் துறந்து மறந்து செயல்பட வேண்டுமே தவிரப் பிறரிடம் குற்றம் காணக் கூடாது. இந்த விதியின்படி நமது இயக்கத்தில் உள்ள எந்த ஓர் உறுப்பினர் எந்த ஒரு மற்ற உறுப்பினரைப் பாதிக்கும்படி விமரிசனம் செய்தாலும்; அது உடனடியாக அந்தந்தக் கிளேயிலிருந்து மாவட்ட நிர்வாகக் குழு வரை படிப்படியாக விசாரிக்கப்பட்டு எந்த ஒரு நிலேயிலாவது நீதி வழங்கப்படும், சரி

செய்யப்படும். மாவட்ட நிர்வாகக் குழு வரை விசாரணை நடத்தியும் இது குறித்துத் தீராத வழக்கு ஏதும் இருப்பின் அது பற்றிய இறுதி விசாரணை இ.ம.இ.யின் பாரம்பரியத் தலைவரான குருதேவரால் நிகழ்த்தப்படும். அதன் முடிவில் குருபீடம் வழங்குகின்ற முடிவே இறுதி முடிவாக இருக்கும்.

11) **"<u>அருட்பணி விரிவாக்கத் திட்டம்</u>"** என்பது **'இந்துமதம் மனிதர்களுடைய அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்று'** என்ற பேருண்மையையும்; **'இந்துமதம் நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும், மற்ற எல்லாவகைப் பாதிப்பாளர்களுக்கும் நலமளிக்கும் ஓர் அரிய மருந்தாகும்'** என்ற பேருண்மையையும்; **'இந்துக்களின் வாழ்வில் ஏற்படக் கூடிய எல்லா வகைப்பட்ட சிதைவுகள், சீரழிவுகள், தொய்வுகள், தேய்வுகள், ஓய்வுகள், மாய்வுகள், ... முதலிய அனைத்தையும் சரி செய்வதற்காகவே உருவாக்கப்பட்ட உயரிய பயன்மிகு செயல்திட்டம்தான் பரிகாரப் பூசைமுறைகள், முடிகயிறு தாயத்து உருத்திராக்கம் சக்கரம் ... முதலிய அருளூறு பூசனைப் பொருட்கள்'** என்ற பேருண்மையையும்; ... விளக்குவதற்காகப் பதினெண்சித்தர்களால் உருவாக்கப்பட்ட ஓர் அரிய ஒப்புயர்வற்ற செயல்திட்டமாகும்.

எனவே இந்த அருட்பணி விரிவாக்கத் திட்டம் என்ற செயல்திட்டத்தை இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் எல்லா வகையான செயல்நிலைகளுக்கும் உரிய சிறந்த ஒரு சாதனமாகக் கருத வேண்டும், பயன்படுத்த வேண்டும். அதாவது, நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம் பொதுமக்களோடு எல்லா வகையான தொடர்புகளையும் வளர்த்துக் கொள்ளவும்; பொதுமக்களுக்கு இந்துமதத்தில் நம்பிக்கையும், பற்றும், பாசமும், பிடிப்பும், ஆழ்ந்த ஈடுபாடும், அளவற்ற ஆர்வமும் உண்டாகும்படிச் செய்வதற்கும்; இந்த அருட்பணி விரிவாக்கத் திட்டம்தான் சிறந்த ஒரு சாதனம்.

இன்னும் சொல்லப் போனுல் நமது இ.ம.இ.யின் செயல்வீரர்கள் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய துன்பங்களேயும், தொல்லேகளேயும், எதிர்த்துப் போரிடுவதற்காகச் செயல்படக் கூடிய ஒரு போர் வாள் அல்லது வீர வாள்தான் அ.வி.தி. செயல்திட்டம். எனவே, இ.ம.இ.யில் இருப்பவர்களில் **கருவிலேயே திருவுடையவர்களாக, அதாவது பிறப்பிலேயே அருளாளர்களாகப் பிறந்தவர்களும், இன்றைக்குப் பயிற்சி முயற்சிகளால் அருளாளர்களாகத் தயாராவதற்கு விரும்புகிறவர்களும் மட்டுமே இந்த அருட்பணி விரிவாக்கத் திட்டத்தில் முன்னணிச் செயல்வீரர்களாகச் செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும்; அல்லது செயல்பட முடியும், செயல்பட முடியும், செயல்பட முடியும்.**

எனவேதான், **அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் செயல்வீரர்களாகச் செயல்பட விரும்புகிறவர்கள் அனேவரும் கட்டாயமாக மீசை, தாடி, தலேமுடி வளர்த்தாக வேண்டும், வளர்த்தாக வேண்டும், வளர்த்தாக வேண்டும்**.

**இதுதான் அருளுலகத்தின் சட்டம், விதி, அருளாணே.**

**குறிப்பு**:- இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைப் பொறுத்தவரை இது போன்று யாரும் மீசை, தாடி, தலேமுடி கட்டாயமாக வளர்க்க வேண்டுமென்ற அவசியமில்லே, அவசியமில்லே, அவசியமில்லே. ஆனுல், இ.ம.இ.யில் செயல்படுகின்றவர்கள் வேட்டியாவது, மேலே அணிந்து கொள்ளும் மெய்ப்பை எனும் சட்டையாவது கட்டாயமாகக் குருதி வண்ணச் சிவப்புச் செவ்வாடையாக இருக்க வேண்டும். அதாவது, வேட்டியாவது, சட்டையாவது சிவப்பாக இருக்க வேண்டும். அல்லது இரண்டுமே சிவப்பாக இருக்கலாம். **இதுதான் இ.ம.இ.யைப் பொறுத்தவரை அருளுலகச் சட்டம், விதி, அருளாணே.**

இதன்படிதான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியான ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் (கி.மு. 100 முதல் கி.பி. 150 முடிய) அவர்களும்; பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியான குருமகாசன்னிதானம் ஞானாச்சாரியார், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் (கி.பி. 785 முதல் கி.பி. 1040 வரை) அவர்களும்; இளம் சிறாஅர் முதல் பெரியோர் வரைக் குருதி வண்ணச் செவ்வாடை அணிந்துதான் இ.ம.இ.யில் இருக்க வேண்டும் என்று ஆணையிட்டுத் திரட்டிய மக்களின் மூலம்தான் அருளாட்சி அமைத்தார்கள்.

எனவே, நமது இ.ம.இ. செயல்வீரர்களின் ஆடைகளில் ஏதேனும் ஒன்று கட்டாயமாகக் குருதி வண்ணச் சிவப்பு ஆடையில் இருக்க வேண்டும். இந்த அருளுலகச் சட்டத்தையும், விதியையும், அருளாணையையும் இ.ம.இ. செயல்வீரர்கள் கட்டாயமாகக் கடைப்பிடித்தாக வேண்டும். **அருளாணை பெற்ற குருவாணை**.

12) **அருட்பணி விரிவாக்கத் திட்டம் என்பது**

√ அருட்கோட்டம் வைத்து மக்களுக்கு மந்திரித்துச் செயல்படுவது;

√ ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு மந்திரித்து அருள்வழங்குவது;

√ ஊர் தோறுமுள்ள அருளாற்றல் நலிந்த, குறைந்த, தேங்கிய, பாதிக்கப்பட்ட, ... கோயில்களைப் புத்துயிர்ப்புச் செய்தலும், புதிய கோயில்களுக்கு உயிர்ப்புச் செய்தலும்;

√ சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றம் வைத்து அதன் மூலம் இந்துமதத்தின் அருட்கலைகள், விஞ்ஞானங்கள், இலக்கியங்கள், கொள்கைகள், குறிக்கோள்கள் முதலியவற்றை விளக்கி உரைத்தல்;

√ சித்தர் கருவூரார் அருட்கோட்டத்திலும், சித்தர் கருவூரார் வார வழிபாட்டு மன்றத்தின் மூலமும் கோயில்களிலும், பொது இடங்களிலும் கூட்டு வழிபாடு நிகழ்த்துதல்;

... ... முதலிய பல்வேறு வகையான நிறுவன நிர்வாக அமைப்புக்களை உடையது அல்லது செயல் சித்தாந்தங்களை உடையது.

எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் நிர்வாகக் குழுக்கள் எந்தெந்த ஊரில் எந்தெந்த வகையான அருட்பணி விரிவாக்கத் திட்டத்தைச் செயலாக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அல்லது முடிவெடுக்கிறார்களோ, அதனை உடனடியாக இ.ம.இ.யின் பாரம்பரியத் தலைவர் குருதேவர், ஞானாச்சாரியார் அவர்களுக்குத் தெரிவித்துத் தேவையான அருளுரை, அறிவுரை, யாககுண்ட முறை, கொடிமர முறை, மெய்ஞ்ஞானக்கொடி, தேவையான சக்கரங்கள், தேவையானவர்களுக்குத் தேவையான பயிற்சிகள், ... முதலியவற்றைப் பெற்றே அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உண்டாக்க வேண்டும்.

குறிப்பு:- **அருட்பணி விரிவாக்கத் திட்டம்தான் நமது உயிர்நாடி, அல்லது இந்துவேதத்தின் உயிர்நாடி, இந்துமதத்தின் உயிர்நாடி என்பதால்; அருட்பணி விரிவாக்கத் திட்டமும், அதன் செயல்வீரர்களும் இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியார், இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, குருதேவர், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் பாரம்பரியத் தலைவர் அவர்களோடு மிகுந்த அளவில் நேரடித் தொடர்பை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அதாவது, அ.வி.தி.யின் அனைத்து வகையான செயல்நிலைகளும்; செயல்வீரர்களின் செயல்களும், இ.ம.இ.யின் பாரம்பரியத் தலைவர் குருதேவருக்கு உடனுக்குடன் தெரிவிக்கப் பட்டு அவருடைய ஒப்புதலைப் பெற்றேயாக வேண்டும். அப்பொழுதுதான், அனைத்து வகையான அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்புக்களும், பத்தி சத்தி சித்தி முத்திகளும் அ.வி.தி.**

**<u>நிலையங்களுக்கும், அ.வி.தி. செயல்வீரர்களுக்கும் கிடைக்கும், கிடைக்கும், கிடைக்கும்.</u>**

13) கோவை மாவட்ட இ.ம.இ.யின் நிருவாகக் குழு அருட்பணி விரிவாக்கத் திட்டத்திற்குரிய எல்லாவகையான செயல்நிலையங்களையும், செயல்வீரர்களையும் மாவட்டம் முழுவதும் தோற்றுவித்துச் செயல்படுமாறு அருளாணை பெற்ற **குருவாணை** இதன் மூலம் வழங்கப்படுகிறது.

14) அருள்மிகு பன்னாரி மாரியம்மன் சன்னிதானம் சோ. அம்பிகாபதி அவர்கள், இந்து வேத மாநாட்டு முடிவின்படி 1992 அக்டோபர் வரை அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்களையும், செயல்வீரர்களையும் கோவை மாவட்டம் முழுவதும் புதிது புதிதாகத் தோற்றுவிப்பதற்கு **‘அ.வி.தி.யின் சிறப்பு நிர்வாக அமைப்பாளராக’** நியமிக்கப்படுகின்றார். இதற்காக, இவர் மேலே குறிப்பிட்ட பன்னிரண்டு பேர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவை மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் (தாலுகா) உருவாக்குவதற்குரிய **சிறப்புக் குருவாணை**யை இதன் மூலம் பெறுகிறார்.

<u>குறிப்பு</u>:- 4, 5-11-1991 தீபாவளித் திருநாளுக்குரிய நன்னாளில் இந்தக் கோவை மாவட்ட இ.ம.இ., அ.வி.தி. அமைப்புக்குரிய அருளாணை பெற்ற குருவாணை வழங்கப்படுகிறது.

**குருவாணை**

**அன்பு**
**சித்தர்,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**
**4, 5-11-91.**

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு த. செயக்குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து வேதம் அறிக்கை

**பதினெண்சித்தர் மடம், காரணேடை, சென்னை - 67.**

1. அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் காலங்கள் தோறும், தேவைகளுக்கேற்ப புதுப்பிக்கப்பட்டு கடவுள்களாலேயே எழுதப்பட்ட, எழுதப்படுகின்ற, எழுதப்படும் ஒரே வேதம் இந்துவேதம்தான்.
2. 108 வகைப் பூசைமொழி நூல்களையும், 48 வகை பூசாவிதி நூல்களையும், 96 வகை தத்துவ நூல்களையும், 144 வகை செயல் சித்தாந்த நூல்களையும்; ஆக மொத்தம் 396 தனித்தனி நூல்களையும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் கொண்டுள்ள ஒரு பெரிய வேதமே இந்துவேதம்.
3. இந்து என்ற சொல் பொருளாழமிக்க ஓர் அழகிய இனிய செந்தமிழ்ச் சொல்.
4. 'இந்து' என்ற செந்தமிழ்ச் சொல்லுக்கு நூற்றுக்கணக்கான சொற்களில் பொருள் கூறப்பட்டிருக்கிறது.
5. இந்துமதம் 43,73,092 (1991இல்) ஆண்டுப் பழமை உடையது.
6. கடவுள்களைப் பற்றிய நுட்பமான செய்திகளைத் திட்டவட்டமாக **'இந்துவேதம்தான்'** வரையறுத்துக் கூறுகிறது.
7. இந்துவேதத்தில்தான் கடவுள்களின் வகைகள், கடவுள்கள் வாழ்கின்ற இடங்களின் வகைகள் கணக்கிடப்பட்டிருக்கின்றன.
8. கடவுள்களில் ஆண் நிலை, பெண் நிலை, இரண்டும் கலந்த நிலை என்ற மூன்று வகைகள் கணக்கிடப்பட்டுள்ளன.

9. ஆண் நிலைக் கடவுள்களில் 1008 வகையினரும், பெண் நிலைக் கடவுள்களில் 243 வகையினரும், இரண்டும் கலந்த நிலையில் 108 வகையினரும் உள்ளார்கள் என்று கணக்கிட்டுக் காட்டியுள்ள வேதம் **இந்துவேதம்**தான்.

10. அண்டபேரண்டங்களிலிருந்து பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்-படிக் கருப்புகளும் இம்மண்ணுலகிற்கு கொண்டு வந்த மொழிதான் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி.

11. 'காலங்கள் தோறும் தோன்றிடும் கடவுள்கள் வாழ்ந்து மக்களுக்கு அருள் புரிவதற்கு உருவாக்கப்பட்ட இடங்களே கோயில்கள்' என்று கூறுவதுதான் இந்துமத வேதம்.

12. 'ஒவ்வொரு கோயிலிலும் 16 வகைப்பட்ட கடவுள்கள்; நூற்றுக் கணக்கிலோ, ஆயிரக்கணக்கிலோ வாழ்கிறார்கள்' என்று கூறும் ஒரே வேதம் இந்துவேதம்.

13. 'கடவுள்களில் அருவக் கடவுள்கள், அருவுருவக் கடவுள்கள், உருவஅருவக் கடவுள்கள், உருவக் கடவுள்கள் என்று நான்குவகைக் கடவுள்கள் உண்டு' என்று கூறுகிறது இந்து மத வேதம்.

14. 'கடவுள்களுக்கும் பிறப்புண்டு, இறப்புண்டு, பிறப்பிறப்பற்ற பெருநிலையும் உண்டு' என்று கூறும் ஒரே வேதம் இந்துவேதம்தான்.

15. 'கடவுள்கள் தானாகத் தோன்றுகிறார்கள், பிறரால் தோற்றுவிக்கவும் படுகிறார்கள்' என்று கூறும் வேதம் இந்து வேதம்.

16. உலகம், பயிரினம், உயிரினம் ஆகிய மூன்றின் தோற்றம், வளர்ச்சி, மறைவு இவற்றைப் பற்றி முறையாகக் கூறும் ஒரே வேதம் இந்து வேதம்.

17. மனிதனைக் கடவுளாக்கவும், கடவுளை மனிதனாக வரச் செய்யவும் வழி கூறும் ஒரே வேதம் இந்து மத வேதம்.

18. கடவுள்களில் மண்ணுலகக் கடவுள்கள், விண்ணுலகக் கடவுள்கள் என்ற இரு பெரும் வகைகளை மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறுகின்ற வேதம் இந்து வேதம்.

19. 'கடவுள்தான் பயிரினங்களையும், உயிரினங்களையும் படைத்தார் என்பது தவறு; பயிரினங்களும், உயிரினங்களும்தான் கடவுளைப் படைக்கின்றனர்கள்' என்று கூறும் ஒரே வேதம் இந்து வேதம்.

20. 'முன்னோர்களை வழிபடுவதும், மூத்தோர்களைப் பணிந்து ஏற்றுப் போற்றி வாழ்வதும்தான் மதவாழ்வு' என்று கூறும் ஒரே வேதம் இந்துமத வேதம்.

21. 'கோயில்கள் எங்கோ இருக்கின்ற கடவுளை மனதால் நினைத்து, மக்கள் கூடி நின்று பூசை செய்யும் இடமல்ல' என்று கூறும் ஒரே வேதம் இந்துமத வேதம்தான்.

22. 'அருளுலகப் பொருளுலகப் பயன்பெற அவரவர் பாரம்பரியமாகக் கும்பிடக்கூடிய கோயிலின் கருவறைக்கு சென்றுதான் கும்பிட வேண்டும்' என்று கூறும் வேதமே இந்துமத வேதம்.

23. 'கடவுள்களின் வாழ்நாளுக்கு எல்லை உண்டு, அறிவுக்கு எல்லை உண்டு, ஆற்றலுக்கு எல்லை உண்டு, ஆட்சி செய்கின்ற நிலத்திற்கு எல்லை உண்டு' என்று கூறும் ஒரே வேதம் இந்து வேதம்தான்.

24. 'கடவுள்கள் கோடிக்கணக்கில் உண்டு; ஒவ்வொரு நிர்வாகத்தையும் கவனிக்க தனித்தனி கடவுள்கள் நூறாயிரக் கணக்கில் தனித்தனியாக உள்ளார்கள்' என்று கூறும் வேதம் இந்துவேதம்.

25. ‘ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குரிய கடவுள் வேற்று நாட்டுக்கு செல்ல மாட்டார்கள்; ஒரு குறிப்பிட்ட மொழிக்குரிய கடவுள்கள் வேற்று மொழிகளைத் தெரிந்திருக்க மாட்டார்கள்’ என்று கூறும் ஒரே வேதம் இந்து வேதம்.

26. ‘கடவுள்களுக்கும் நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இனப் பற்று உண்டு’ என்று கூறும் வேதம் இந்து வேதம்.

27. ‘எம்மதமும் சம்மதம் என்று கூறுவது செயலுக்கு வராத கற்பனையான, பொய்யான, மோசமான ... கருத்து; அதே சமயத்தில் எல்லா மதங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்’ என்று கூறும் வேதம் இந்து வேதம்.

28. ‘உலகியலில் அறவி, உறவி, மறவி, துறவி என்ற நான்கு வகை வாழ்க்கையும் நீதியானதே, நியாயமானதே, முறையானதே, சரியானதே’ என்று கூறும் வேதம் இந்து வேதம்.

29. ‘மத வாழ்வில் அருவ, அருவுருவ, உருவருவ, உருவ வழிபாடு என்ற நான்கு வகை வழிபாடுகளும் சரியானதே, பயனுடையதே’ என்று கூறும் வேதம் இந்துவேதம்.

30. ‘ஒரு குறிப்பிட்ட திசை முதல் 64 திசைகளையும் நோக்கி பூசை செய்வது சரியானதே, பயனுடையதே’ என்று கூறும் வேதம் இந்து வேதம்.

31. ‘அந்தந்த நாட்டிற்கும், இனத்துக்கும், மொழிக்கும் உரிய மதம் வேற்று நாட்டுக்கோ, இனத்துக்கோ, மொழிக்கோ முழுமையாகப் பயன்பட முடியாது’ என்று கூறும் வேதம் இந்து வேதம்.

32. ‘குறிப்பிட்ட நேரங்களிலும், குறிப்பிட்ட காலங்களிலும் கட்டாயமாக வழிபட வேண்டும் என்ற விதி தேவையில்லை’ என்ற விடுதலைப் போக்கும், நோக்கும் உடைய ஒரே வேதம் இந்துமத வேதம்.

# சில இந்து வேத வாசகங்கள்

மனிதப் பிறவியே புனிதப் பிறவி.

இல்லற வாழ்க்கைதான் இறைவாழ்க்கை.

பூசைக்காக மாதந்தோறும் மலரும் மலரே மங்கை.

கோயிலே மனித நாகரிகத்தின் தொட்டில்.

பூசையே மனிதப் பண்பாட்டின் உயிர்நாடி.

மதமே மனிதகுல வரலாறு, அதுவே அனைத்துக்கும் தாய்.

பெண் தெய்வமே பெருந் தெய்வம்.

தத்துவ எழிச்சியே தனிமனித விழிச்சி! தனிமனித விழிச்சியே சமுதாயச் செழிச்சி!!

தன்னையறிந்தால் கடவுளை அறியலாம், கடவுளையறிந்தால் தன்னை அறியலாம்.

மதமே மனித வாழ்வுக்கு மருந்தும் விருந்தும்.

மொழிதான் மதத்தின் விழி, வழி!

**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: அச்சிட்ட அறிவிக்கை//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் (கி.பி.785 - 1040)...



மெய்ஞ்ஞானக்கொடி

...பாரம்பரியத்தில்

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த **ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர் அவர்களின்** குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

"இந்துக்களே! கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கடிய தீட்டு, நெடிய சாபம்."

- குருபாரம்பரிய வாசகம்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-